## தமிழ்நாட்டின் எட்டுத் திக்கிலிருந்தும்

# விளையாட்டுத்துறை சாதனையாளர்களை உருவாக்குவோம்!

## விளையாட்டு வீரர்களுக்கு ‘சாம்பியன்ஸ் கிட்’ வழங்கி

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துரை!

சென்னை,நவ.13 –

**தமிழ்நாட்டின் எட்டுத்திக்கிலிருந்தும் விளையாட்டுத்துறை சாதனையாளர்களை உருவாக்குவோம் என்று விளையாட்டு வீரர்களுக்கு சாம்பியன்ஸ் கிட் வழங்கி வாழ்த்தி உரையாற்றுகையில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விடுதி மாணவர்கள் 2 ஆயிரத்து 600 பேருக்கு சாம்பியன்ஸ் கிட் வழங்கும் விழாவில் விளையாட்டு வீரர்களுக்கு சாம்பியன்ஸ் கிட் வழங்கி, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உற்சாக வாழ்த்துத் தெரிவித்தார்.

சென்னை, நேரு உள் விளையாட்டு அரங்கத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவின் பேரில், ரூ.15 கோடி மதிப்பில், ராணிப்பேட்டை மாவட்டத்தில், `மாவட்ட விளையாட்டு வளாகம்’ அமைத்திடவும், மதுரை மாவட்ட விளையாட்டு வளாகத்தில் ரூ.6 கோடி மதிப்பில் `ஒலிம்பிக் அகாடமி’ தொடங்கவும் காணொலிக் காட்சி வாயிலாக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.

அப்போது, `தமிழ்நாட்டின் எட்டுத்திக்கில் இருந்தும் விளையாட்டுத்துறைச் சாதனையாளர்கள் புறப்பட்டு வந்திட வேண்டும் என்ற உறுதியோடு செயலாற்றுவோம்’ என்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.

அப்போது அவர் ஆற்றிய சிறப்புரைவருமாறு:

இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் உள்ள எஸ்.டி.ஏ.டி. விடுதி (விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விடுதி) மாணவர்கள் 2 ஆயிரத்து 600 பேருக்கு சாம்பியன்ஸ் கிட்டை வழங்குவதில் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றோம்.

தமிழ்நாட்டில் புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டங்களில் `மாவட்ட விளையாட்டு வளாகங்கள்’ அமைக்கப்படும் என்று அறிவித்து இருந்தோம். அதன்படி, இன்றைக்கு ராணிப்பேட்டையில் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில், மாவட்ட விளையாட்டு வளாகத்திற்கு இன்றைக்கு உங்கள் முன்னிலையில் அடிக்கல் நாட்டியுள்ளோம்.

### மனதிற்கு நெருக்கமானவர்கள்

மதுரை மாவட்ட விளையாட்டு வளாகத்தில் 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் `ஒலிம்பிக் அகாடமி’ அமைய உள்ளது. அதற்கும் இன்றைக்கு அடிக்கல் நாட்டியுள்ளோம். இன்றைக்கு சென்னை மண்டலத்திற்குட்பட்ட 500 எஸ்.டி.ஏ.டி மாணவர்கள் வந்து இருக்கிறீர்கள். எஸ்.டி.ஏ.டி விடுதி மாணவர்கள் நீங்கள் எப்பொழுதுமே எங்கள் மனதிற்கு மிகவும் நெருக்கமானவர்கள்.

### என் முதல் கேள்வி

எந்தவொரு விளையாட்டுப்போட்டி நடந்தாலும், அது தேசிய விளையாட்டுப் போட்டியாக இருந்தாலும், நம் மாநில விளையாட்டுப் போட்டியாக இருந்தாலும், முதலில் நம் மெம்பர் செகரட்டரியிடமும், நம் ஏ.சி.எஸ்சிடமும்ம் நான் கேட்பது, எஸ்.டி.ஏ.டி மாணவர்கள் வந்து இருக்கிறார்களா? எத்தனை பேர் வந்து இருக்கிறார்கள்? அவர்களுக்குப் பயணச்செலவு தயார் செய்து இருக்கிறீர்களா? அவர்களுக்கு விளையாட்டுப் போட்டிகளைப் பார்ப்பதற்கான வாய்ப்பு கொடுக்கப்பட்டு இருக்கிறதா? என்பதுதான் என் முதல் கேள்வியாக இருக்கும். மற்ற இடங்களில் விடுதி என்று சொன்னால், தங்கும் இடம். உண்டு, உறைவிடம் என்று அர்த்தம். ஆனால், எஸ்.டி.ஏ.டி விடுதி என்று சொன்னால், நம் தலைசிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்குவற்கான, விளையாட்டு வீரர்களைப் பட்டை தீட்டுவதற்கான `பயிற்சிக் களம்’ என்று நாம் சொல்லலாம்.

எஸ்.டி.ஏ.டி மாணவர்கள் இன்றைக்குப் பல்வேறு சர்வதேச, தேசிய, மாநில அளவிலான போட்டிகளில் நீங்கள் எல்லாம் சாதித்து வருகிறீர்கள். பெருமை தேடி வந்துக்கொண்டு இருக்கிறீர்கள்.

### அனைவருக்கும் பெருமை

குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால், தம்பி பிரவீன், ரமேஷ், சந்தோஷ், தங்கைகள் சுபா, வித்யா ஆகியோர் ஒலிம்பிக் வரை சென்று, நம் தமிழ்நாட்டிற்கும், இந்திய நாட்டிற்கும் பெருமையைத் தேடித் தந்துள்ளீர்கள். அதேமாதிரி பிரிக்ஸ் பீச் வாலிபாலில் சில்வர் மெடல் வென்ற தம்பிகள் பூந்தமிழன், ஏ.வி.சி காண்டினென்டல் கப் பீச் வாலிபாலில் சில்வர் கப் வென்ற தங்கை பவித்ரா, ஏசியன் கிரேடு- 2 ஜூனியர் டென்னிஸ் டோரனமென்ட்டில் வெள்ளி வென்ற தங்கை சன்மிதா, வெண்கலம் வென்ற ஜோசிதா, தங்கைகள் சுஜி, ஏஞ்சலினா ஜான், தீபிகா, தம்பி ரவி, பிரகாஷ் என்று ஏகப்பட்ட சர்வதேச வீரர்கள், வீராங்கனையர்களை நம் எஸ்.டி.ஏ.டி விடுதி உருவாக்கி இருப்பதில், நம் அனைவருக்கும் மிகப்பெருமை.



சமீபத்தில், நடந்த முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் நம் எஸ்.டி.ஏ.டி விடுதி மாணவர்கள் நிறைய மெடல்கள் வென்றுள்ளீர்கள். அதற்கும் இந்த நேரத்தில் பாராட்டுகளை, வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் இன்றைக்கு மாணவர்களாக, வீரர்களாக இருக்கலாம். ஆனால், நாளைக்கு விளையாட்டுத் துறையின் மிகப்பெரிய சாதனையாளர்களாக நீங்கள் மாறப் போகிறீர்கள்.

### ஏராளமான பதக்கங்கள்

நம் முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு, நம் எஸ்.டி.ஏ.டி மாணவர்கள் மீது அவ்வளவு நம்பிக்கை வைத்து இருக்கிறது. அந்த நம்பிக்கையின் அடையாளமாகத்தான் உங்களின் சாதனைகளுக்குத் துணை நிற்கக்கூடிய வகையில் இன்றைக்கு இந்தச் சாம்பியன்ஸ் கிட்டை உங்களுக்கு வழங்குகிறோம்.

இதுவரை இல்லாத அளவிற்குக் கிட்டத்தட்ட 86 லட்சம் மதிப்பீட்டில் பேக் பேக், ட்ரோமல் ப்ளாக்ஸ், தவஸ், ஸ்மார்ட் வாட்ச், கேப் உள்ளிட்ட 8 மெட்டீரியல்ஸ் உங்களுக்குக் கொடுக்கிறோம். இவற்றைப் பெற்றுக் கொண்டுள்ள நீங்கள் போட்டிகளில் வெற்றிபெற்று ஏராளமான பதக்கங்களைக் குவிக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

### இலக்கை நிர்ணயிங்கள்!

இலக்கை நிர்ணயித்துக் கொள்ளுங்கள். ``இத்தனை வருடத்தில் போட்டிகளில் இத்தனை வெண்கலம் பெறுவேன். இந்தப் போட்டியில் கண்டிப்பாக நான் சில்வர் பெறுவேன். சீக்கிரமே நான் கோல்டு மெடலைப் பெற்றுக் காட்டுவேன்” என்று உங்களுக்கு நீங்கள் இலக்கை நிர்ணயித்து, அதன் மூலம் நீங்கள் பயணிப்பீர்கள் என்று நம்புகிறேன்.




**“உங்களுக்கு ஸ்போர்ட்ஸ் மெட்டிரியல் வாங்க வேண்டும் என்றால், வெளியூர் அல்லது வெளிநாடு சென்று விளையாட வேண்டும் என்றால், அதற்கான செலவைப் பற்றி நீங்கள் கவலைப்படவே வேண்டாம்.**

**உங்களின் திறமைக்குப் பொருளாதாரம் ஒரு தடையாக இருக்கக்கூடாது, என்பதற்காகத்தான் நம் முதலமைச்சரின் முன்னேற்பாட்டில் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையை, நம் முதலமைச்சர் அவர்கள் இரண்டு வருடத்திற்கு முன்பு துவங்கி வைத்தார்.”**

உங்களுக்கு ஸ்போட்ர்ஸ் மெட்டிரியல் வாங்க வேண்டும் என்றால், வெளியூர் அல்லது வெளிநாடு சென்று விளையாட வேண்டும் என்றால், அதற்கான செலவைப் பற்றி நீங்கள் கவலைப்படவே வேண்டாம். உங்களின் திறமைக்குப் பொருளாதாரம் ஒரு தடையாக இருக்கக்கூடாது, என்பதற்காகத்தான் நம் முதலமைச்சரின் முன்னேற்பாட்டில் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையை, நம் முதலமைச்சர் அவர்கள் இரண்டு வருடத்திற்கு முன்பு துவங்கி வைத்தார்.

### 14 கோடி அளவிற்கு நிதி உதவி

அந்தச் சாம்பியன்ஸ் அறக்கட்டளையின் மூலம் இதுவரை 600-க்கும் மேற்பட்ட வீரர்களுக்கு, வீராங்கனைகளுக்கு ரூபாய் 14 கோடி அளவிற்கு நிதி உதவிகளை நாம் வழங்கி இருக்கிறோம். இதற்காக tnchampions.sdat.in என்ற இணையத்தளத்தில் சென்று விண்ணப்பித்தால், உங்களின் திறமைக்கும், தேவைக்கும் ஏற்ப நிச்சயம் விளையாட்டு உபகரணங்கள் மற்றும் நிதி உதவிகள் வழங்கப்படும்.

நம் விளையாட்டு விடுதி மாணவர்களுக்கு, தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையில் இருந்து உடனுக்குடன் நிதியுதவிகள் கொடுத்துக் கொண்டு இருக்கிறோம். நீங்கள் வெற்றியோடு திரும்பி, தமிழ்நாட்டுக்குப் பெருமை சேர்த்தால், கண்டிப்பாக உங்களின் திறமையை அங்கீகரிக்கின்ற விதமாக நம் முதலமைச்சர் அவர்கள் உயரிய ஊக்கத்தொகையைத் தொடர்ந்து வழங்கிக் கொண்டு இருக்கிறார்.

### கழக அரசு செய்த பணிகள்

இதை ஏன் சொல்கிறேன் என்றால், நம் திராவிடல் மாடல் அரசு அமைந்த மூன்று ஆண்டுகளில் 120 வீரர்களுக்குச் சுமார் 108 கோடி ரூபாய் அளவிற்கு உயரிய ஊக்கத்தொகையை நம் முதலமைச்சர் அவர்கள் வழங்கி இருக்கிறார்கள். முக்கியமாக, கடந்த மூன்று ஆண்டுகளில் எஸ்.டி.ஏ.டி. விடுதிக்கு நம் கழக அரசு செய்த பணிகள் சிலவற்றை மட்டும் இங்குக் குறிப்பிட விரும்புகிறேன்.

நம் எஸ்.டி.ஏ.டி விடுதியின் தரம் எந்த விதத்திலும் குறைவாக இருக்கக்கூடாது. உலகத் தரத்தில் இருக்கவேண்டும் என்று நம் முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு உத்தரவிட்டார். அந்த உத்தரவின்படி, விடுதிகளின் நிலை எப்படி இருக்கிறது என்று முதலில் ஆய்வு செய்தோம். சம்பந்தப்பட்ட விடுதி மாணவர்கள், பயிற்சியாளர்கள், பணியாளர்கள், மாவட்ட விளையாட்டு அலுவலர்கள் எல்லோரிடமும் ஆலோசனை செய்தோம். அந்த ஆய்வுகள், கருத்துகள் அடிப்படையில் விடுதிகளை மேம்படுத்த பல திட்டங்களை உருவாக்கினோம்.

### நவீன வசதிகள்

அதேமாதிரி விடுதிகள் முழுவதும் எல்லா விடுதிகளிலும் நவீன வசதிகளைக் கொடுக்க வேண்டும் என்று, டைனிங் டேபிள், சி.சி.டி.வி. கேமராக்கள், டி.வி., ஃப்ரீசர், ஆர்-ஓ-பிளான்ட் வித் யு.வி வாட்டர் ட்ரீட்மென்ட், மஸ்கிட்டோ நெட்ஸ், ரெஃப்ரிஜிரேட்டர் ஆகியவை வழங்கப்பட்டன. விளையாட்டின்போது உங்களுக்கு அடிபடலாம். சிகிச்சை தேவைப்படலாம். அதை மனதில் வைத்து, உங்கள் அத்தனைப் பேருக்கும் மெடிக்கல் இன்சூரன்சையும் நம் கழக அரசு வழங்கி இருக்கிறது.

குறிப்பாக, விடுதி மாணவர்களின் வருகையை உறுதி செய்திட, பேஸ் ரிககனைசேஷன் அட்டெண்டென்ஸ் சிஸ்டத்தை எல்லா எஸ்.டி.ஏ.டி விடுதிகளிலும் உருவாக்கி இருக்கிறோம். இப்படி விளையாட்டு விடுதிகளின் கட்டமைப்பும் பெருமளவில் சீரமைக்கப்பட்டு இருக்கிறது. உதாரணத்திற்கு, இங்கு ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டு அரங்கில் பன்னோக்கு அரங்கில் பெண்களுக்காக, புதிதாக ஒரு `பாக்சிங் ஹால்’ அமைக்கப்பட்டு இருக்கிறது.

அதேபோல் ஜவஹர்லால் நேரு வெளி விளையாட்டு அரங்கில் `வெயிட் லிப்டிங் ஹால்’, `ஜிம் ஹால்’ ஆகியவை சர்வதேசத் தரத்தில் முழுமையாகச் சீரமைக்கப்பட்டு இருக்கின்றன. அதுமட்டுமில்லாமல், நிறைய விளையாட்டு வீரர்களுக்குப் பயிற்சி அளிக்கும் விதமாகப் புதிய விளையாட்டுகளைச் சேர்த்திருக்கிறோம்.

### புதிய விளையாட்டுகள்

ஊஸு, ரெஸ்லிங், மல்லகம், சைக்கிளிங், டென்னிஸ், ஆர்ச்சரி, ஃபுட்பால், கபடி, கேண்ட் பால் போன்ற புதிய விளையாட்டுகள் சேர்க்கப்பட்டு இருக்கின்றன. அதேபோல் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம், நுங்கம்பாக்கம் டென்னிஸ் ஸ்டேடியம், வேளச்சேரி அக்வொடிக் ஜிம்னாஸ்டிக் பேட்மிட்டன் காம்ப்ளக்ஸ் ஆகிய இடங்களில் சென்டர்ஸ் ஆப் எக்ஸலன்ஸ் ஆகியவற்றுக்குப் புதிதாக விடுதிகள் திறக்கப்பட்டுள்ளன.

காஞ்சிபுரம், எழும்பூர், மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி ஸ்டேடியம், காட்பாடி ஆகிய இடங்களில் ஸ்போர்ட்ஸ் ஹாஸ்டல்ஸ் ஆப் எக்ஸலன்சும் திறக்கப்பட்டு, அங்கு பல்வேறு விளையாட்டுகளுக்கும் புதிதாகப் பயிற்சிகள் வழங்கப்பட்டு இருக்கின்றன. நம் அரசு எடுத்த இந்த நடவடிக்கையால் விடுதிகளில் சென்ற வருடம் வரை 2,300 மாணவர்கள் தங்கி இருந்தார்கள். இந்த ஆண்டு, கிட்டத்தட்ட அது 2,800 ஆக உயர்ந்துள்ளது.

இன்னும் முக்கியமாகச் சொல்ல வேண்டும் என்றால், எந்தவொரு பரிந்துரையும் இல்லாமல், வெளிப்படைத் தன்மையுடன் நம் எஸ்.டி.ஏ.டி விடுதி விண்ணப்பத்தைப் பெருமையோடு நடத்தி இருக்கிறோம். எஸ்.டி.ஏ.டி டேலண்ட் என்ற நவீன சாப்ட்வேர் மூலம் மாணவர்களின் செயல்திறன் மதிப்பீடு செய்யப்பட்டு அதன் மூலமாகத்தான் விண்ணப்பம் தரப்பட்டு இருக்கிறது.

மாணவர்களுக்கு உணவுக்கு ஒதுக்கப்பட்ட தொகை ஒரு நாளைக்கு ரூபாய் 250-லிருந்து இன்றைக்கு 350 ரூபாயாக உயர்த்தப்பட்டு இருக்கிறது. உங்களின் சீருடைக்கான கட்டணம் ரூபாய் 4 ஆயிரத்தில் இருந்து, ரூபாய் 6 ஆயிரமாகவும், விளையாட்டு உபகரணங்கள் வாங்குவதற்கான உதவித்தொகை ஆயிரம் ரூபாயிலிருந்து 2 ஆயிரம் ரூபாயாகவும் நம் முதலமைச்சர் அவர்கள் உயர்த்திக் கொடுத்து இருக்கிறார்.

### பயிற்சி செய்யுங்கள்

எஸ்.டி.ஏ.டி விளையாட்டு விடுதிகளுக்கு விளையாட்டு உபகரணங்களை வாங்குவதற்காக, இந்த ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் ரூபாய் 5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும் இங்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். உங்களுக்காக உருவாக்கப்பட்ட உங்கள் முதலமைச்சரால் வழங்கப்பட்ட இந்தத் திட்டங்களை எல்லாம் நீங்கள் நன்றாகப் பயன்படுத்திக்கொள்ளுங்கள். நல்லபடியாகப் பயிற்சி செய்யுங்கள்.

விளையாட்டுத் துறையில் நீங்கள் எடுக்கின்ற முயற்சிகள் நிச்சயம் உங்களை அந்த வெற்றிப் பாதையில் கண்டிப்பாக அழைத்துச் செல்லும். இங்கு எஸ்.டி.ஏ.டி பயிற்சியாளர்கள், மாவட்ட விளையாட்டு ஆணைய அலுவலர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள், எஸ்.டி.ஏ.டி. பணியாளர்கள் அதிக அளவில் வந்து இருக்கிறீர்கள்.

தமிழ்நாட்டை விளையாட்டுத்துறையின் தலைநகராக ஆக்க வேண்டும் என்ற இலட்சியத்தை உங்களின் துணை இல்லாமல் எங்களால் எட்ட முடியாது. அதை உணர்ந்து, அரசு எடுக்கின்ற ஒவ்வொரு நடவடிக்கைக்கும் முழு ஒத்துழைப்பு அளித்து வருகின்ற உங்களுக்கு அன்பையும், நன்றியையும், வாழ்த்துகளையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

### ஒன்றியத்திற்கான வெற்றி

நம் எஸ்.டி.ஏ.டி விடுதி மாணவர்களுக்கு நீங்கள்தான் தாய், தந்தையராக இருந்து அவர்களின் வெற்றிக்கு எப்பொழுதுமே துணை நிற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களை இன்னும் பல உயரங்களுக்குக் கையைப் பிடித்து அழைத்துச் செல்ல வேண்டும். ஏனென்றால், நம் வீரர்கள் பெறுகின்ற வெற்றி, அவர்களின் தனிப்பட்ட வெற்றி கிடையாது. அவர்கள் குடும்பத்திற்கான, அவர்களின் ஊருக்கான வெற்றி மட்டும் கிடையாது. அது ஒட்டுமொத்த தமிழ்நாட்டிற்கான, ஒட்டுமொத்த இந்திய ஒன்றியத்திற்கான வெற்றி என்பதை நீங்கள் அறிவீர்கள். உங்களுக்கு நம் திராவிட மாடல் அரசு, அனைத்து வகையிலும் துணை நிற்கும். இன்னும் பலத்திட்டங்களை நம் முதலமைச்சர் அவர்கள் கண்டிப்பாகத் தருவார்கள். துணை முதலமைச்சராக, விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் அமைச்சராக மட்டுமல்ல, உங்கள் ஒவ்வொரு வீட்டின் பிள்ளையாக, உங்களின் அண்ணனாக, தம்பியாக, உங்களுக்குத் தேவையான அனைத்துத் திட்டங்களையும் நிச்சயமாகப் பெற்றுத் தருவேன்.

ஆகவே, இந்த சாம்பியன்ஸ் கிட்டைப் பெற்றுள்ள உங்கள் அத்தனைப் பேருக்கும் என் அன்பையும், வாழ்த்துகளையும் தெரிவித்து, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

நன்றி வணக்கம்.,

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்யா மிஸ்ரா தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் மேகநாத் ரெட்டி மணிகண்டன், எஸ்.டி.ஏ.டி பொது மேலாளர் சுஜாதா, மற்றும் எஸ்.டி.ஏ.டி பயிற்சியாளர்கள், மாவட்ட விளையாட்டு ஆணைய அலுவலர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள், எஸ்.டி.ஏ.டி. பணியாளர்கள், விளையாட்டு வீரர் வீராங்கனைகள், எஸ்.டி.ஏ.டி. விடுதி மாணவர்கள் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.11.2024) சென்னை வேளச்சேரியில் நடைபெற்ற “சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் – 2024” செஸ் போட்டியின் பரிசளிப்பு விழா நிகழ்ச்சியில், சிங்கப்பூரில் நவம்பர் 20 முதல் டிசம்பர் 15ம் தேதி வரை நடைபெறவுள்ள “உலக செஸ் சாம்பியன்ஷிப் – 2024” போட்டியில் கலந்து கொள்ள உள்ள தமிழ்நாட்டின் செஸ் விளையாட்டு வீரர் டி. குகேஷ் பயிற்சி பெற, போட்டியில் பங்கேற்க செலவின தொகையாக ரூ.10 இலட்சத்திற்கான காசோலையினை வழங்கினார். உடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாதரெட்டி, புகழ்பெற்ற செஸ் வீரர் விஸ்வநாதன் ஆனந்த் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.11.2024) நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய 39 விடுதிகளில் தங்கி பயிலும் 2,600 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு “சாம்பியன்ஸ் கிட்” என்ற, விளையாட்டு வீரர்கள் அத்தியாவசியமாக பயன்படுத்தக் கூடிய பொருட்களின் தொகுப்பினை வழங்குவதன் அடையாளமாக 553 வீரர், வீராங்கனைகளுக்கு “சாம்பியன்ஸ் கிட்” தொகுப்பினை வழங்கி, அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்து கொண்டார். இந்நிகழ்ச்சி யில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாதரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.